# தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்,' சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, சித்திரை 24 (6-'5-61) சனிக்கிழமை | இதழ் 46


# பாவ மன்னிப்பு - 2

காற்றுச் சுழன்றடித்தது.

காலக்கிழவன் மீண்டும் அங்கே தோன்றினான்.

'தோமான்' தேசத்துத் தெருக்களில், அவன் எதிர்பார்த்த பரபரப்பும், உற்சாகமும் இல்லை.

தோமானியவிடுதலை வீரர்கள், மூலைக்குச் சிலராக நின்றுபேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொருவர் முகத்திலும், ஆழ்ந்த சிந்தனை படர்ந்திருந்தது.

வாய் மட்டும் அலட்சியமான வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்தது.

உயிரில்லாத சிரிப்பும், அவர்கள் உதட்டில் வழிந்துகொண்டிருந்தது.

காலக்கிழவன் இவற்றைக் கவனமாகப் பார்த்தான்.

தோமானிய மக்களின் பரிதாப நிலையை எண்ணி அவன் வருந்தினான்.

"இவர்கள் நிரந்தரமான அடிமைகளே!

இவர்களுக்கு என்றும் மீட்சியில்லை!"

என்று அவன் வாய் முணுமுணுத்தது.

ஒளிமயமான கண்களும், ஞானத் தெளிவு கொண்ட முகமும், அமைதியான நடையும் படைத்த காலக்கிழவன், அங்கே நின்றவரில் ஒருவரைக் கைகாட்டி அழைத்தான்.

காலக்கிழவனைப் பார்த்ததும், அங்கே நின்றவர்களில் பலர் அவன் அருகில் ஓடிவந்தனர்.

"எல்லாம் முடிந்ததா" என்று கேட்டான் கிழவன்.

"ஒரு வழியாக முடிந்தது" என்றான் ஒருவன்.

"விடுதலைகிடைத்துவிட்டதா" என்று கிழவன் கேட்டான்.

"கிடைத்து விட்டது; ஒரு கூட்டத்திடமிருந்து" என்றொருவன் பதில் சொன்னான்.

"அவர்கள் எங்கே?"

"தனிக்கோட்டை கட்டியிருக்கிறார்கள்."

"அங்கே எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?"

"மிகக் குறைவு, மிகக் குறைவு; மிக மிகக் குறைவு."

"நீங்கள் எவ்வளவு பேர்."

"பல லட்சம், பல லட்சம்"

"உங்கள் கூத்தாட்டரங்கம் எப்படியிருக்கிறது."




'கொஞ்சம் சோர்ந்திருக்கிறது' இருந்தாலும் சமாளித்துக்கொள்வோம்."

"இனி உங்களுக்குக் கவலையில்லை."

"இல்லை, நிச்சயமாக இல்லை."

"என்ன செய்யப்போகிறீர்கள்."

"கோஷம் போடப்போகிறோம், கோஷம்."

காலக்கிழவன் சிரித்தான்!

"நடத்துங்கள், நடத்துங்கள். பத்துப் பனிரெண்டு ஆண்டுக் காலமாக நீங்கள் செய்த மகத்தான பணி அதுதான்.

வாழ்க! ஒழிக! என்ற இரண்டே வார்த்தைகளுக்குள் உங்கள் அரசியல் வித்தை முடிவடைகிறது.

ஒரு காலத்தில், யாருக்கு "வாழ்க" கோஷம் போட்டீர்களோ, அவர்களுக்கே "ஒழிக" கோஷம்போடுவீர்கள்இப்போது.

"ஒழிக" "வாழ்க" ஆவதும்; "வாழ்க" 'ஒழிக" ஆவதும் உங்களுக்குச் சாதாரணம்.

உங்களை மேய்த்துக் கொண்டிருப்பவர்கள், இந்த இரண்டுக்கு மேல் உங்கள் சிந்தனை வளரக் கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

ஆராய்ச்சியும் அறிவார்ந்த சிந்தனையும், உங்களுக்குப்பிடிக்காது.

ஒரு கொடியில் ஒரேமலர்தான் மலர வேண்டும்.

அது கருகிப்போன பின்னும், அதையேதான் தலையில் சூடிக் கொண்டு திரியவேண்டும்.

அது கருகிவிட்டதை யாராவது சுட்டிக் காட்டினால், அவர்களைத் துரோகிகளாக்கி விட வேண்டும்.

இந்தத் தத்துவத்தை, உங்கள் மேய்ப்பர்கள் உங்களுக்கு நன்றாகக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

புதிய மலர்கள் மலரலாமா?

கூடாது!

காளை கிழவனாகலாம்;

கன்னி கிழவியாகலாம்.

இரவு பகலாகலாம்;

பகல் இரவாகலாம்.

ஆலமரம் விழுது விடலாம்;

விழுதிலும் ஒரு விழுது பிறக்கலாம்.

ஆனால், மாறிவரும் உலகத்தின் நியதிகளில் எதுவும் உங்களுக்குப் பிடிக்காது.

கல்லால் அடித்த சிலைபோல், காய்ச்சியுருக்கிய பாளம்போல், ஒரேயிடத்தில் காலூன்றிக் கொண்டு அசையாதிருப்பதே உங்கள் தர்மம்.

சமுதாயத்தின் வெற்றிதோல்விகளைப் பற்றி உங்களுக்குக் கவலையில்லை!

வெறும் வார்த்தை ஜாலங்களிலும், வர்ணமாய விளையாட்டுக்களிலும்—

கூட்டங்கூட்டுவதிலும், கூவி அழுவதிலுமே தோமான் தேசத்தின் விடுதலை அடங்கிக் கிடப்பதாக நீங்கள் முடிவு கட்டிவிட்டீர்கள்!

உங்கள் ராஜாங்கத்தில் மரியாதையே தனிவகை.

கண்ணீர் வடிக்கத் தெரிந்தவனே கண்ணியமானவன்.

கொள்கைகளைக் கட்டிப்போடத் தெரிந்தவனே கட்டுப் பாடானவன்.

(2-ம் பக்கம் பார்க்க)

கல்லையும்செருப்பையும், கையிலெடுக்கத்தெரிந்தவனே கடமையுணர்ந்தவன்.

தோமானிய விடுதலை வீரர்களே!

உங்களை நினைக்கும் போது எனக்கு இரக்கம்தான் தோன்றுகிறது!

ஒவ்வொரு கூட்டம் கூடும் போதும் அழுகிறீர்களாமே? இப்படி அழுது கொண்டேயிருந்தால் உடம்பு என்ன ஆகும்?

அதோடு, எவனெவன் அழாதவன் என்று குறிப்புக்கூட எடுத்துக் கொள்வீர்களாமே!

ஐயோ நண்பர்களே!

வெள்ளத்தில் மிதந்துவரும் படகுபோல், விடுதலை கண்ணீரிலா மிதந்துவரும்?"

இப்படிக் காலக் கிழவன் சொன்னதும் ஒருவன் இடைமறித்தான்.

"நிறுத்து கிழவா! நிறுத்து! அவர்களுந்தான் எங்களுடன் இருந்தபோதே அழுதார்கள்" என்றான்.

"வேறென்ன செய்வது, அதுதான் உங்கள் அரசியல் சட்டம் என்று ஆன பிறகு, இருக்கும் வரை அதற்குக் கட்டுப் பட்டுத்தானே தீர வேண்டும்.

நாடகமாடுவோர் நாடாளமுடியுமென்று நீங்கள் சொன்னீர்கள்; உண்மை.

ஆனால், நாடாள வருகிறவர்களுக்கும் நாடகமாடத் தெரிய வேண்டும் என்பதை விதியாக்கி விட்டீர்கள்.

பொய்யே உங்கள் மூலதனம்.

அதிலேயே நடந்து கொண்டிருக்கிறது உங்கள் வாழ்க்கை.

தோமானுக்கு நீங்கள் விடுதலை வாங்கித் தரப்போகிறீர்களா?

காலக்கிழவன் உ யி ரோ டு இருந்தால் அதையும்தான் பார்க்கப் போகிறான்.

காலையில் இரைதேடப்போன பறவைகள், மாலையில் கூடு வந்து சேர்வதுபோல், நீங்கள் ஒவ்வொருவரும் ஊருக்கு ஊர் இரைதேடிவிட்டு வீட்டுக்குவந்து சேர்கிறீர்கள்.

கூடுகிற கூட்டமே உங்களை மெய்சிலிர்க்க வைத்து விடுகிறது!

சேவை, தியாகம் என்பவையெல்லாம் தேவையில்லாதவைகளாக ஆகிவிட்டன.

உங்களுக்குமுன்னால், இந்தத் தேசத்தில் ஒரு விடுதலை இயக்கம் இருந்தது.

உங்களைவிட அவர்களுக்குக் கூட்டம் குறைவுதான்.

ஆனால் சொத்தையிழந்தவர்கள், தொழிலைத் துறந்தவர்கள், அதிலே ஏராளம்.

ஏழாண்டுச் சிறைவாசம், எட்டாண்டுச் சிறைவாசம், ஆயுள் தண்டனை, தூக்குமேடை அத்தனையும் சுவைத்தவர்கள் அதிலே இருந்தார்கள்.

அதன் தலைவர்கள் அனைவரும் இருந்ததை இழந்தவர்கள்.

ஆனால் உங்களிலோ, ஓராண்டுக்காலம்சேர்ந்தாற்போல்சிறையிலிருந்த செம்மல் உண்டா?

மாரடைப்பால் இறந்துபோனவனையும் மாவீரனாக்கி மகிழ்வதைத் தவிர...

போர்க்களத்தில் இறந்து போன போர்வீரன் உண்டா?

சாலை ஓரத்தில், தனிப்பட்ட பகையால் கொல்லப்பட்ட தொண்டனை, சரித்திரத் தலைவனாக்கி மயான காண்டம் பாடுவதைத் தவிர—

தளபதியாகி போருக்குச் சென்றான்; கொல்லப்பட்டான் என்ற வரலாறு உண்டா?

என் நண்பர்களே!

எடுத்துக்கொண்ட எந்தக் காரியத்தில் நீங்கள் முழுச் சக்தியையும் பிரயோகித்தீர்கள்?

அது போகட்டும்—

எதற்காகப் பாடுபடுகிறோம் என்பதை முழுதாக எழுதி வைத்த ஏடாவது உங்களிடம் ஒன்று உண்டா?

விடுதலைத் தலைவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் தத்துவ ஏடுகளை எழுதி உலகத்திற்குத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

ஆனால் உங்கள் தலைவர்களோ.......

நண்பர்களே!

நான் சொன்னால் கோபிப்பீர்கள்.

உங்கள் தலைவர்கள் எழுதிய ஏடுகளை நீங்களே மறுபடிப் படித்துப் பாருங்கள்!

அது மட்டுமல்ல — உங்கள் மேய்ப்பர்களையே நீங்கள் ஆராய்ந்தும் பாருங்கள்.

அவர்களில் இவர்கள் இருப்பார்கள்:

காதல் களியாட்டத்தைவிட மனோகரமானது எதுவுமில்லையென்று கருதுபவர்கள்—

தினமும் தங்கத்தைச் சேர்த்தால் நாமும் ஒரு சிற்றரசர் ஆகிவிடலாம் என்று நினைப்பவர்கள்—

பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து, பொய்யான புகழ் கொண்டு, முடிவிலும் பொய்யாகவே போக இருக்கின்ற ஏய்ப்பர்கள்—

அன்புமில்லை; அழகுமில்லை; தெம்புமில்லை; திராணியுமில்லை என்றும், பொதுவாழ்க்கையை வியாபார நிலையமாக்கிக் கொண்டு, சுகமாளிகையை அமைத்துக்கொண்டவர்கள்—

இவர்களுக்குக் கீழே, எங்கே போகிறோம் என்பதைத் தெரியாமலேயே போய்க்கொண்டிருக்கும் நீங்கள்—

சிறுவர்களே!

கலகலத்துப்போன உங்கள் அரசியல் மண்டபத்தைக் கடுமொழிகளாலே கட்டிக்காக்க முயலாதீர்கள்!

மூலைக்கு மூலை சத்தம்போட்டு, அந்த மயக்கத்திலேயே நீந்திக் கொண்டிருக்க நினைக்காதீர்கள்.

காரியமாற்றுங்கள்!

களத்திலே இறங்கி, நாலு பேர் செத்துக் காட்டுங்கள்.

சுடுகாட்டில் கிடக்கும் பிணங்களுக்கெல்லாம் சொந்தங் கொண்டாடாதீர்கள்.

ஒப்பாரியையும், பிலாக்கணத்தையும் நிறுத்துங்கள்.

கௌரவத்திலும், பெருந்தன்மையிலும் உங்களுக்குப் பழக்கமில்லாவிட்டாலும், இனியாவது பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

அழகான தோமானிய மொழியை, உருட்டி விளையாடிச் சித்ரவதை செய்யாதீர்கள்.

மொழி என்பது கருத்துக்களைச் சொல்லும் ஒரு சாதனம்.

அதைக் கடித்துத் தின்னாதீர்கள்.

கூத்தாட்டரங்கின் விளக்கு வெளிச்சத்தில் விடுதலையைக் காண முயலாதீர்கள்.

மனிதர்கள், காலுக்குக் காவலாகவே செருப்புக்களைக் கண்டுபிடித்தார்கள்.

அதை நீங்களும் காலிலேயே மாட்டிக் கொள்ளுங்கள்.

உங்களைவிட்டு விலகிப்போனவன் சொன்னதைப்போல்—

எதைக் கையில் பிடிப்பது, எதைக் காலில் அணிந்து கொள்வது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இல்லை, கைச்செருப்பிலேயே எங்கள் விடுதலையை அடையப் போகிறோம் என்று நீங்கள் சொல்வதானால்—

தொடர்பாக இன்னும் சில மாற்றங்களைச் செய்துகொள்ளுங்கள்.

பின்புறமாகவே நடந்து பழகுங்கள்.

தலைகீழாக நின்று பழகுங்கள்.

இடுப்பிலிருக்கும் ஆடையை எடுத்துத் தலையில் கட்டிக் கொள்ளுங்கள்.

வார்த்தைகளை ஏறுமாறாகப் பேசுங்கள்.

தோமானியக் கொடியில் உங்களுக்கு விருப்பமான சின்னங்களைப் பொறித்துக்கொள்ளுங்கள்.

எல்லாம் புது ரகமாக இருக்கட்டும்.

வெறும் மிரட்டல் வேலையை மட்டும் நடத்தாதீர்கள்.

இது அவர்களுக்கு ஒன்றும் புதிய அனுபவமல்ல.

என்னடா காலக்கிழவன் அந்தப் பக்கமே பேசுகிறான் என்று கருதுகிறீர்களா?

நான் எந்தப் பக்கத்திலுமில்லை!

ஆனால் இந்தப்பக்கத்தைவிட, அந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது!

இப்படிக் காலக்கிழவன் சொல்லிக் கொண்டிருந்தபோது, ஒரு பகுதியில் பரபரப்பான சத்தம் கேட்டது.

ஏய்ப்பனும் ஒரு கூத்தனும் ஓடிவந்து கொண்டிருந்தார்கள்.

"சதிசதி, எங்கள் அழகு முகங்களைக் கெடுப்பதற்குச்சதி' என்றவர்கள் கூச்சலிட்டார்கள்.

"அழகா? முகமா? உங்களுக்கா? உங்கள் வயதென்ன?" என்று கேட்டான் காலக் கிழவன்.

ஏய்ப்பனும், கூத்தனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"உங்கள் முகம் அழகாக இருக்கிறதென்று நீங்களே சொல்லிக் கொள்வது நன்றாக இருக்கிறதா?

கொஞ்சங் கண்ணாடியில் பாருங்கள்!"

என்று சொல்லி விட்டுக் காலக் கிழவன். சிரித்தான்.

"அடிப்போம், உதைப்போம், சதிகாரர்களை வெட்டுவோம்" என்றான் ஏய்ப்பன்.

காலக்கிழவன் மீண்டும் சிரித்தான்.

"இனி அதில் நீங்கள் இறங்கினால், உங்களைத் தூக்கிச் செல்ல நாலுபேர் கிடைக்கமாட்டார்கள்.

உலகம் ஒன்றும் உங்கள் கையில் இல்லை.

தோமானிய மக்களில் முன்னூறு பேர்களுக்கு ஒருவர்தான் உங்களிடம் இருக்கிறார்கள்.

பாக்கி 299 பேர் வெளியில் இருக்கிறார்கள், ஜாக்கிரதை!" என்றான்.

(தொடரும்)

**விரைவில் வெளிவருகிறது.**

# மாதவி

(அரசியல் வார ஏடு)

**ஆசிரியர் : இரா. தியாகராசன்**

**திரு. பி. சி. கணேசன் எழுதும்**

★ சிறுகதைகள்
★ கட்டுரைகள்
★ வரலாற்றுத் தொடரோவியம் ஆகியவை

ஏட்டுக்கு ஏடு இடம்பெறும்.

**தனிப்பிரதி 16 காசுகள்** **ஆண்டுச் சந்தா ரூ 8.**

**பிரதி ஒன்றுக்கு 75 புதுக்காசுகள் வீதம் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.**

விவரங்கட்கு :

**மாதவி**
**தபால்பெட்டி எண் 1** **திருவாரூர்**
**(தஞ்சை மாவட்டம்)**

# நாடில்லை வாழ்வதற்கு; நாதியில்லை கேட்பதற்கு!

அன்புடையோய்! வணக்கம் பல.

'மொழி உரிமை, குடி உரிமை, நில உரிமை கோரி எமது இயக்கம் கடந்த பிப்ரவரி 20ந் தேதி தொடக்கம் சத்தியாக்கிரகஞ் செய்து வந்ததைத் தாங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். கடந்த ஏப்ரல் மீ 17ந் தேதி இரவு 12 மணிக்கு ஆட்சியாளர் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்தி, எமது இயக்கத் தலைவர்களைக் கைது செய்து தடுப்புக் காவலில் போட்டனர். ராணுவத்தை வடக்கு கிழக்கு மாகாணங்கட்கு அனுப்பி இராணுவ மூலம் அட்டூழியஞ் செய்விக்கும் அநியாயத்தை ஆற்ருது தங்கட்கு எழுதுகின்ருேம். கடந்த காலங்களில் இலங்கை வாழ் தமிழ் மக்களது உரிமைக்குரல் உலகை நோக்கி எழுந்த போது, தங்கள் பத்திரிகை எமக்கு முக்கியத்துவம் தந்தமையை உளத்திற் கொண்டே இதனை எழுதுகின்ருேம்.

இபக்கத் தலைவர்கள் அனைவரும் சிறைப்பட்டார்கள்.

இரண்டாவது, மூன்ருவது பிரிவினரையும் தடுப்புக் காவலென்ற பெயரில் சிறைக் கூடங்களில் அடைத்துள்ளார்கள்.

எந்த வித ஆதரவோ, வழி காட்டும் தகுதியோ இல்லாது மக்கள் தவிக்கும் நேரத்தே, சிங்கள ராணுவம் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் செய்யும் அட்டூழியங்களில் ஒரு சிலவற்றை எழுதுகின்றேன்.

தமிழ் மக்களது வீடுகளிலும் புகுந்து, தமிழ்த் தலைவர்களது படங்களை எடுத்து அவ்வீட்டாரிடம் கொடுத்து கண்ணுடியை உடைக்கச் செய்து பின் படத்தைத் தீ வைக்கும் படிக் கட்டளை இடுகிருர்கள். தயங்கியவுடன் துப்பாக்கியின் அடிப் பாகத்தால் நெஞ்சிலே குத்தியும், சப்பாத்துக் காலினல் உதைத்தும் அடித்தும் துன்புறுத்தி, குறித்த நபர் அறிவற்ற நிலையில் இருக்கும் போது, தாமாகவே படத்திற்குத் தீ வைத்து விட்டுச் செல்கிருர்கள்.

சிங்கள சிறியினை தெருவிலே எழுதி விட்டு அவ்வீதியில் போவோரை அதனை விழுந்து வணங்கும் படிக் கட்டளையிடுகிருர்கள். தயங்கினல் இரண்டு பேராகச் சேர்ந்து குறித்த நபரை நிலத்திலே வீழ்த்தி முதுகில் துப்பாக்கியின் அடிப்பாகத்தால் குத்துவார்கள். காலினல் உதைப்பார்கள். தார் வீதியில் 10, 15 நிமிஷம் கிடக்கும்படி செய்கிருர்கள்.

தெரு வீதியில் இருக்கும் கறுப்புக் கொடியைப் பிடுங்கி அவ்வீதியில் வரும் ஆண் பெண் இருபாலாரிடமும் கொடுத்து "செல்வநாயகம் செத்துப் போனன், நாகநாதன் செத்துப் போனன்" என்று எல்லோரும் உரத்துக் கூறிக் கொண்டு தெரு வீதி வழியே போகச் செய்கிருர்கள். (இதில் பெண்கள் நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்).

கடைகளினுள்ளே புகுந்து தமக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு "பணத்தைச் செல்வநாயகத்திடம் வாங்கு" எனக் கூறிச் செல்வார்கள்.

தென்னங் கீற்றினல் அடைக்கப் பட்ட வேலிகளுக்குத் தீ வைப்பது தெரு வோரமாக இருக்கும் ஓலையால் வேயப்பட்ட வீடுகளுக்குத் தீ வைப்பது, கள்ளுக் கொட்டில்களிற் சென்று (கள்ளுக்கடை) கள்குடித்து விட்டுப், பணங் கொடாது செல்வது, ராணுவ லாரிகளால் பொது மக்களது மோட்டார் வண்டிகளை மோதி உடைப்பது, லாரிகளில் இருந்து தெரு வீதியில் போவோரைப் பிரம்பினல் அடிப்பது, எதிர்ப்போரை ராணுவ லாரியிலோ, ஜீப் வண்டியிலோ ஏற்றி அடித்துவிட்டு முகாமிலே கொண்டு சென்று அவர்கள் மீது பொய் முறைப்பாடுகளைக் கொடுத்து அடைத்து வைப்பது, புதிய மோட்டார் வண்டிகள் வான் முதலியவற்றை அபகரித்துத் தாம் வீதி வலம் வருவது, போன்ற அட்டூழியங்கள் ஆயிரம் ஆயிரம்.

"சிங்கள பாஷா ஜெய வீவர்" (சிங்கள மொழியே வெற்றி பெறு) என்ற சுலோகத்தை ஒவ்வொரு தமிழ் பேசும் மக்களும் உரத்துக் கூற வேண்டும். "தமிழ் வேண்டாம் சிங்களமே எங்கள் பாஷை" என்று கூறத் தவறுவோர் சித்திர வதைப்பட வேண்டியோரே.

மாலை ஆறு மணி தொடக்கம், காலை ஆறு மணி வரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உண்டு. ஆனல் 4 மணிக்கே ராணுவ வீரர்கள் அடி போட ஆரம்பித்து விடுவார்கள். காலையிலும் 7 மணியின் பின்னரே பொது மக்கள் தெருவீதியில் நடமாடத் தொடங்குவர்.

இது இராணுவ வீரர்களின் பொதுப்பணி. ஆனல் தமிழ் மாகாணங்களிலுள்ள காரியாலயங்களில் சிங்கள தர்பார் தாண்டவமாடுகின்றது. விண்ணப்ப பாரங்கள் சிங்கள மொழியிலே விநியோகம். இதில் எமக்குப் பரிச்சயமில்லையே என்ருல் 'தயவு செய்து வெளியே போய் சிங்களத்தைப் படித்துக் கொண்டு வந்து வேண்டியதைச் செய்யும்' என்ற பதில் கிடைக்கிறது.

ஆட்சியாளரே-எத்தனையோ சதியைச் செய்கிருர்கள். தலைவர்களோ சிறையில் கிடந்து வாடுகிருர்கள். பொது மக்களுக்கு ஆட்சியாளர் செய்யும் துன்பம் அளவற்றது. கேட்பாரற்ற நிலையில் ஆற்றுவாரோ தேற்றுவாரோ இன்றி அலங்கோலப்படும் இந்நேரத்தே தங்களைப் போன்ருேர் எடுக்கும் முயற்சி உண்மையிலேயே இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சார்பில் உலகத் தமிழர் அனைவர்க்கும் தேடி வைக்கும் பெரும் பணியாகும். உயர் திரு. சம்பத் M. P. அவர்கள் டில்லி சட்ட சபையில் இத்துன்பியலைக் கூறத்தவற மாட்டாரென உறுதியாக நம்புகிருேம். சம்பத் அவர்கள் சூழ்நிலையை யாம் நன்கு உணர்ந்துள்ளோமாயினும் அன்னரின் பொறுப்புணர்ச்சியினையும் நாமறிவோம். நாடறியும். இக்கடிதத்தினைத் தங்கட்கு நேரே அனுப்பவில்லை. அவவாறு அனுப்பினல் இது தங்களை வந்தடையும் என்பது ஐயத்துக்கிடமானது. எனவே தான் வேருேர் மார்க்கமாக இதனைத் தங்கட்கு அனுப்புகின்ருேம். டில்லி சட்டசபையில் ஒலிக்கும் குரல் தான் எமக்கு ஆறுதலைத் தரும் எனப் பணிவன்புடன் வேண்டுகின்ருேம். தமிழ் நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகள் தணிக்கை செய்யப்படுகின்றன. ஆதலால் தங்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கட்கு ஆறுதல் செய்தி ஒன்று எழுதி எமது முகவரிக்கு அனுப்பி வைப்பின் நாம் அதனை எப்படியும் அச்சேற்றிப் பொது மக்கட்கு விநியோகம் செய்வோம். அதனல் மக்கள் ஓரளவாவது சாந்தி பெறுவர். ஆறுதல் செய்தியினை விமானத் தபால் மூலம் அனுப்புமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

**இலங்கை ஆசிரியர் ஒருவர்**

# வீண்பழி?

**மாறன், பி. ஏ.**

கொள்கையோ, நடை முறைப் போக்கோ ஒத்துவராதவை என்று தெரிந்தால், ஓர் அமைப்பிலிருந்து பிடிக்காதவர்கள் வெளியேறுவது அரசியல் உலகில் இயல்பு. இதற்காக வெளியேறியவர்கள் மீது வீண்பழி சுமத்துவதோ, அபத்தமான குற்றச் சாட்டு ஏற்படுத்துவதோ, விவேகமற்றது மட்டுமல்ல. அரசியல் அநாகரிகமும் காட்டுமிராண்டித் தனமும் ஆகும்.

ஆனல் இங்கேயோ—நமது தமிழகத்தில் 'திராவிட நாடு' கோரிக்கை பகற் கனவாய் இருப்பதையும் திரு. அண்ணுதுரையின் மடாதிபதித் தன்மையும், கண்டு திரு. சம்பத் அவர்கள் தலைமையிலே நாம் பிரிந்தோம். தனியமைப்பு கண்டோம். நாட்டு மக்களுக்கு தூய நற்பணி யாற்ற புதிய பாதை யமைத்துக் கொண்டோம்.

திரு. அண்ணுதுரையின் வாடிக்கையான பரவசம் ஊட்டும் குடும்பப் பாச முயற்சியும், அன்பழைப்பும், தோல்வியை அணைத்த பிறகு தி மு. கழகத் தோழர்கள் நம்மீது அபாண்டமான-அபத்தமான பழியைச் சுமத்துகிருர்கள். 'கண்ணகி' என்ற ஏட்டிலே வந்த ஆதாரமற்ற-நமது திரு சம்பத் அவர்கள் சொல்லியபடி இரண்டாந்தர அரசியல் வாதிகளின் பாணியைத் தழுவிய, புனைந்துரைச் செய்தியொன்றை-கற்பனைச் செய்தியை வெளியிட்டதை வைத்துக் கொண்டு "டெல்லி பாராளு மன்றத்திலே போர்ப் பரணி பாடும்" எம். பி. யிலிருந்து கடைசித் தட்டிலே இருக்கும் கொடி தூக்கும் தொண்டன் வரை, "டில்லி அசோகா ஹோட்டலில் சம்பத்திடம் இலட்சக் கனக்கான ருபாய்கள் பேரம் பேசப்பட்டன" என்று பேசியும், எழுதியும் வருகிருர்கள்.

இந்த வீண்பழி சுமத்துவோர்க்கு-அரசியல் விவேகமற்ற இரண்டாந்தரங்களுக்கு நாம் சொல்லுவது இது தான். 'கண்ணகி' ஏடு திரு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பின்பற்றுவது. அவரை ஆதரிப்பது மட்டுமன்றி அவரது ஆதரவின் கீழ் நடை பெறுவது. இதே முத்துராமலிங்கத் தேவர் 1957-இல் திரு காமராசர் கள்ள நோட்டு அடித்ததாயும். அதில் ஆயிரம் ருபாய் திரு. அண்ணுதுரையிடம் கொடுத்ததாயும், பல பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாகவே சொன்னர். அப்போது திரு அண்ணுதுரை சட்ட மன்றத்தில் திரு, சசிவர்ணத் தேவரைப் பார்த்து "நீங்கள் தான் திருத்த வேண்டும் திரு. முத்துராமலிங்கத் தேவரை" என்று பரிதாபமாக முறையிட்டார். தி. மு, க. வினர் இன்று அவர் ஏடு சொல்வதை எப்படி உண்மையென ஏற்கின்ருர்களோ, அப்படியே திரு. அண்ணுதுரையைப் பற்றி அன்று பசும் பொன்னர் சொல்லிய பகிரங்கக் குற்றச் சாட்டை உண்மையென்று ஏற்க முன்வருவார்களா?

அது போகட்டும். சென்ற பொதுத் தேர்தலின் போது பெரியார் அவர்கள் சென்னையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் அப்போது ஜனவரி மாதம், கன்னிமாரா ஹோட்டலில் திரு: ஏ. டி. ஷிராப் என்பவரிடம் திரு. என். வி. நடராசன் ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கியதாகத் தேதியையும், ஹோட்டல் அறை எண்ணையும். தொகையையும் பகிரங்கமாகச் சொன்னரே அதை இது வரை யார் மறுத்தார்கள்? "விடுதலை" யிலேகூட எழுதப் பட்டிருந்ததே!

அவ்வளவு தூரம் போவானேன்! திரு. அண்ணுதுரை ஆச்சாரியாரிடம் வரும் தேர்தலுக்காக ரு, 45 இலட்சம் பேரம் பேசியதாக ஒரு காங்கிரஸ் வார ஏடு பிரசுரித்திருந்ததே! அதை உண்மை யென்று ஏற்பார்களானல் திரு. சம்பத்தைப் பற்றிய பழியை அவர்கள் நம்புவதை நாம் கண்டிக்கவில்லை.

நாம் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திரு. அண்ணுதுரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியபோது திராவிடக் கழகத்தினர் "அண்ணுதுரைக்குத் தலைவராக வேண்டுமென்ற ஆசை. அதோடு சட்ட சபை செல்ல வேண்டும் என்ற ஆசை. ஆகையால் தான் அவர் திராவிடக் கழகந்திலிருந்து பிரிந்தார்" என்று சொன்னர்களே தவிர திரு. அண்ணுதுரை இன்னரிடமிருந்து பணம் வாங்கியதாகவோ, அதனல் தான் தனிக்கட்சி அமைக்க அவரால் முடிந்தது என்ருே விவேகமற்ற முறையில் பேசவில்லை.

இன்னும் பல எடுத்துக் காட்டின் விரியும்; பெருகும். நமது சம்பத் அவர்களைப் பற்றி ஆதாரமற்ற செய்தியை-கற்பனைச் செய்தியை இட்டுக் கட்டி யுரைப்பார்களேயானல், நாட்டின் வளர்ச்சியில் நாட்டங் கொண்டோரும் அரசியல் தெளிவு பெற்றவர்களும் இவர்களைக் காறித் துப்புவார்கள் என்பது உறுதி.

## "தமிழ் நாடு தனித்தே இருந்தது"

"சேர, சோழ, பாண்டியர்கள் மண்டலாதிபதிகளாக வாழ்ந்தனர் அக்காலத்திலும். அசோகர் காலத்தில் இவர்கள் அரசுரிமை இழக்காது தமிழ் நாட்டைத் தனிநாடாக ஆண்டு வந்தனர் எனில், இது தமிழரின் தனிச் சிறப்பைக் காட்டவில்லையோ எனக் கேட்கிருேம். ஐம்பத்து ஆறு மன்னர்கள், ஐம்பத்தாறு தனித்தனி நாடுகளை ஆண்டு வந்த வரலாற்றைக் கூறும் சமஸ்கிருத நூல்கள் கால முதற் கொண்டு, தமிழ் நாடு தனித்துத் தான் வாழ்ந்து வந்தது.

**கிறிஸ்து பிறப்பதற்கு 6-நூற்ருண்டுகளுக்கு முன்னர் "தமிழர் என்ற ஆரியரல்லாதார் தனி நாகரீகம், தனி மொழி, தனி வரலாறுடன் தனி நேஷனுக வாழ்ந்து வந்தனர்" என்று ஆசிரியர் பார்கித்தர் கூறியுள்ளார்.**

**10-8-1947 'திராவிட நாடு' பக்கம்-4,**

# யாருக்கு நட்டம்?

- கூர்வேல் -

‘என்ன இலாபம்?’ வணிகரின் நினைவில் சதா நிழலாடும் இந்த வார்த்தை, பழுத்த அரசியல்வாதி ஒருவரின் உதட்டிலிருந்து உதிர்ந்திருக்கிறது! ஆனாலும், அதற்காக அவரை நாம் “அரசியல் வணிகர்” என்று கூறத் தயாராயில்லை. ஏனெனில் இந்த முத்துக்களை உதிர்த்திருப்பவர், முன்னாள் கவர்னர் செனரல் அவர்கள்!

வணிகத்துறையில் இக்கேள்வி சரிதான்; ஆனால் அரசியலுக்குப் பொருத்தமல்ல. “இலாபமா?” என்பதைவிட, “நியாயமா?” என்பதற்கே பொதுவாழ்வில் முதலிடம் இருக்கவேண்டும். நியாயமும் — இலாபமும் கைகோர்த்துச் செல்லும்படிச் செய்ய முடியுமென்றால், அதுதான் அரசியல் மேதைத்திறன்! ஆனால் எக்காரணத்தைக் கொண்டும், நியாயத்தைக் காவு கொடுத்து இலாபம் பெற முனையக்கூடாது. அதற்கு அரசியல் தேவை இல்லை; கொள்கை அறிக்கைகள் வேண்டாம்! பெரிய அமைப்புகள் எதற்கு? ஒரு சிறு கூட்டமாகச் சமயோசிதப் புத்தியுடன் (ஆனால், பணபலத்துடன்) வேலை செய்தால் போதும். அரசியலுக்கோ “நேர்மையும் கொள்கையும்” தவிர்க்க முடியாத் தேவைகள். இது இராசகோபாலாச்சாரியாருக்குத் தெரியாததல்ல, காங்கிரசின்மீது அவருக்குள்ள ஆத்திரம் எதை வேண்டுமானாலும், செய்யலாமென்ற எல்லைக்குக் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. இந்த வயதில், அவரை இந்த நிலைமைக்குக் கொண்டுபோய் தள்ளி இருப்பதன் மூலமே காங்கிரசுக்காரர்கள் பெரிய பாவமே செய்திருக்கிறார்கள். அதுபோகட்டும்.

“என்ன இலாபம்?” என்ற கேள்வியை ஆச்சாரியார் எழுப்பியிருப்பது திரு. சம்பத்தைப் பார்த்து. பெரிய வணிகக் குடும்பத்தின் பேரப்பிள்ளை என்றாலும், திரு. சம்பத்துக்குத் தெரியாதது “இலாபம்.” ஆனால் “பக்தி நெறி” ஆச்சாரியாரோ ‘வணிக மொழியில்’ பேசுகிறார்!

“தேர்தல்கள் நெருங்கும் இத்தருணத்தில் தி. மு. கவைப் பலவீனப்படுத்திவிட்டு வெளியே வந்ததில் என்ன இலாபம் காணப்போகிறீர்கள்?” என்று சம்பத்தை நோக்கி அங்கலாய்க்கிறார்!

இதையே திருப்பிக் கேட்கிறோம்! அப்படியானால், ஏதாவது இலாபம் காண்பதற்காகத்தான் ஒரு கட்சியிலிருந்து ஒரு தரப்பினர் பிரியவேண்டுமா? காங்கிரசிலிருந்து ஆச்சாரியாரும் அவருடைய சகாக்களும் விலகியதும் அதற்காகத்தானா? திரு. சம்பத் “அந்த இலாபமெல்லாம்” தெரியாதவர். இன்னும் இளமைத் துடிப்பு அவரை விட்டுப் போகவில்லையே! இளமை பொல்லாத சனியன்; யாருக்குமே இயற்கையான தடை அந்தப் பருவம். ஏனென்றால் இலாப—நட்ட எண்ணமே நுழையமுடியாத இரும்புக் கோட்டை அந்த இளமை. மனத்தில் பட்டதை அப்படியே அப்பட்டமாகக் கூறிவிடுவது, நேர்மையெனத் தோன்றினால் அதை உடனே செய்துமுடிப்பது அதற்காகத் துணிவாகப் போராடுவது — இவையெல்லாம் இளமையின் இயல்புகள். ஆச்சாரியாருக்கு அந்தத் தொல்லை இல்லை. இளமையிலேயே “முதிய” நோக்கு பெற்று “சாணக்கியர்” ஆனவர்! இலாப — நட்டம் மற்றவர்க்கு வெறுங் கணக்கு. அவருக்கு அதுவே பொதுவாழ்வு; அவருடைய வாழ்க்கை வரலாறு காட்டும் படிப்பினை அதுவே. இருமுறை சென்னையின் முதலமைச்சர் ஆனவர்; பொது மக்களின் தேர்தலுக்கு அவர் சென்றதே இல்லை. இதுவரை மக்களின் முன்நின்று அவர்கள் தீர்ப்புத் தருவதற்கு வாய்ப்பே அளிக்காத மாமேதை அவர். மக்கள் சக்தியிடம் அவருக்குள்ள மதிப்பு அவ்வளவு! மக்களாட்சி நெறியைக் கட்டிக் காக்கத்தானே அவருக்கு நேரம் சரியாக இருக்கிறது, பிறகு தேர்தலுக்கு நிற்க நேரம் எது?

தி. மு. கவிலிருந்து பிரிந்தது ஏன்? — என்பதற்கு நீண்ட பட்டியலை ஒளிவுமறைவு இல்லாமல் திரு. சம்பத் மக்கள்முன் வைத்துவிட்டார்! மனத்தில் வைத்திருக்கவில்லை. தி. மு. க. தலைவர்களே “பேய் அறைந்த தலை’போல காட்சி அளிக்கும் போதுஒரு சம்பந்தமும் இல்லாத ஆச்சாரியார், அவர்களுக்கு வக்கீலாக வந்து வாதாடுகிறார்! பழைய தொழில் அல்லவா? ஒருவேளை அவருக்குக் கிடைக்க இருந்த இலாபம் பறிபோயிருக்கலாம். ஆனால் அது மக்களுக்கு எப்படி நட்டமாகும்? பொது மக்களுக்கும், மக்களாட்சி நெறிக்கும் அது பெரிய இலாபமாகவும் இருக்கலாம். யார் கண்டது?

**வீரிய விர்த்தி மாத்திரை**

மித மிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமித போகத்தினாலும், தாது நீர்த்துப் போகுதல் சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்பு தளர்ச்சி, சக்திகுறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, சர்வநாடி நரம்புகளுக்கும் வலுவைக் கொடுக்கவல்ல மிகச் சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரை புட்டி ரூ. 6-00

**லேபனம் மெழுகு**

குறி, சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்சு புட்டி ரூ. 4-00

தேவைக்கு எழுதவும் :
சித்தவைத்திய பண்டிட்
எஸ். வி, ஆர். கண்டர்,
ஆர். ஐ. எம். பி.
இராஜசித்த வைத்தியசாலை
சேலம்-2 (S. I.)

# சினிமாக் கவிஞர்!

கற்பனை உலகில் பொம்மை செய்பவர் என்ற விருதுபெற்றவர், நிஜ உலகத்தில் திடீரென்று ஓர் அதிசயத்தைக் கண்டுபிடித்தார். என்ன திறமை! என்ன உழைப்பு! என்ன ஞானம்!

அவர் கண்டுபிடித்தது, ‘சினிமாக் கவிஞர்’ என்ற ஆங்கிலமும் தமிழும் இணைந்த தொடர்.

சினிமா...இல்லை...இல்லை...திரைப்படத்திற்கு மட்டும் பாடல் எழுதினால்; ஏதோ, தமிழில்மொழிபெயர்க்கத் தெரியவில்லை ஆகவே, சினிமா என்ற ஆங்கிலச் சொல்லை அப்படியே பயன்படுத்திக் கொண்டார் எனலாம்.

ஆனால், இவர் கற்பிக்கும் இலக்கண முறையில் நோக்கினால், அரசவைக் கவிஞர் நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை சினிமாக் கவிஞரா?

“நெஞ்சுபொறுக்குதில்லையே!” பாரதியார்சினிமாக் கவிஞரா!

குறவஞ்சிப்பாடலை இயற்றிய புலவரும் சினிமாக் கவிஞரா?

தங்கரத்னச் சித்தரும் சினிமாக் கவிஞரா?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் சினிமாக் கவிஞரா?

“நாம்”திரை நிழலின் முழுப்பாடல்களும் எழுதியவர் சினிமாக் கவிஞரா?

“மக்கள் கவிஞர்”பட்டுக்கோட்டையாரும் சினிமாக் கவிஞரா?

என்று கேள்விகள் ஒன்றின்பின் ஒன்றாக வெளிவருகிறது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு பணிசெய்யும்ஆசிரியர் சினிமாக்கவிஞரா?

“தென்றல்” அலுவலகத்தைப் போலீஸ் சோதனை செய்யும் அளவிற்கு அரசியலில் பங்கு கொண்டவர் சினிமாக் கவிஞரா?

கவியரங்கங்களுக்குத் தலைமை தாங்கும் தகுதிபெற்றவர், மேடையில் சில நிமிடங்களில் கவிதை எழுதியவர் சினிமாக் கவிஞரா?

ஆட்சியாளருக்குத் தலையங்கத்தில் கவிதை நடையில் சூளுரைப்பவர் சினிமாக் கவிஞரா?

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் படை நடத்திடும் பாடல் தந்தவர் சினிமாக் கவிஞரா?

அரசியல் மேடையில் கருத்துடன் பிரச்சாரம் செய்பவர் சினிமாக் கவிஞரா?

ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதையும், இலங்கைத் தமிழர் பிரச்னைக்காவும் தீவிரப் பிரச்சாரம் செய்தவர் சினிமாக் கவிஞரா?

முன்பிருந்த இடத்தின் மூலவரையும், சகாக்களையும் முன்பு வாழ்த்தியவர் சினிமாக் கவிஞரா?

சிறைதண்டனை, தடியடி, இழிமொழி எல்லாம் தாங்கிக் கொண்டவர் சினிமாக் கவிஞரா?

முடிவாக ஒரு கேள்வி?...

மேடையில் சூளுரை—நாடகத்தில் நடிப்பு—திரையில்பாவனை நடைமுறையில் போராட்டம் என்றால் (**விலக்களிக்கப்பட்டது**) என்ற திரைக்குப் பின்னால் பதுங்கியவரா-சினிமாக் கவிஞர்?

கேள்விகள் பொதுமக்கள் சிந்தனைக்கு - கற்பனை உலகில் பொம்மை செய்பவரைக் கேட்கட்டும்.

நகரத் தந்தை தந்த ஏமாற்றமோ, அல்லது சில நாடுகளின் விடுதலை வீரர்களுடைய வரலாற்றை முன்னுக்குப்பின் முரணாக எழுதிய காரணத்தினால் செல்லாக்காசாகி, கண்ணியத்தைக் கழுவி விட்டு மேடையேறும் ‘அறியாதது’ அலைமோதுகிறது.

கற்பனை உலகத்தை உணர்ந்த கவிஞர், உண்மைத் தமிழகத்திற்குள் நுழைந்ததும், பொம்மலாட்டக்காரருக்கு என்ன எழுதுகிறோம் என்று புரியாமல், தன் முதுகில் புண் இருப்பதை உணரும் தன்மை இல்லாமல், அடுத்தவர் முதுகில் இல்லாத புண்ணை இருப்பதாகக் கற்பனை செய்கிறார் பாவம்! அவர் இருப்பதும் கற்பனை உலகம்தானே!

**இரா. விட்டல்ராசு.**

---

# கேள்வியும்--பதிலும்

**கேள்வி** :- உமக்குத் **தளபதி** என்று பெயர் சூட்டியது சரியா?

**பதில்** :- இல்லை. பொருத்தமாக இன்று அதைத் திருத்தி அமைப்பதானால், **தளர்பதி** என்று கூறலாம்-உடல், உள்ளம் இரண்டும் தளர்ந்திருக்கும் காரணத்தைக் கொண்டு.

23-11-1947, ‘திராவிடநாடு’
பக்கம் 14-ல் அண்ணா.

# சிந்தனை செய்வீர்!

துறையூர் ந. அலி, பி. ஏ.

மூண்டது நெருப்பு தமிழரின் நெஞ்சில்;
மொய்த்தது துயரம், தைத்தது கொடுமை;
மாண்டது உறவு சிங்களத் தீவில்;
மடிந்தது பாசம்; மறைந்தது நேசம்
நீண்டது இரத்த வெள்ளக் காடு;
நெளிந்தன வாங்கே தமிழரின் பிணங்கள்
பாண்டியன் பரம்பரை கண்ணீர்க் குளத்தில்
பதைத்தனர் புழுப்போல்; வதைத்தனர் பகைவர்.

ஆண்டவன் தமிழன்; இலங்கைத் தீவில்
அழகினைச் சேர்த்தது தமிழனின் கரங்கள்;
பூண்டபொன் அணியும் மணியும் இலங்கப்
பொலிவைத் தந்தவன் செந்தமிழ் மறவன்;
தோண்டிட இயலா நிலத்தைத் தோண்டி
சுவைமிகு தேயிலை நட்டவன் அவனே;
தூண்டிய விளக்காய்ச் சுடர்விடும் நாட்டின்
தூய்மையைக் காத்தது மறத்தமிழ் நெஞ்சம்.

சிங்களத் தீவின் உயர்வுக் காகச்
சிந்தினர் நாளும் இரத்தக் கண்ணீர்;
வெங்களம் காண அஞ்சிட வில்லை;
வேதனை கண்டு துவண்டிட வில்லை;
"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
இலங்கை நாட்டு மண்ணுக்" கென்று
பொங்கிய உணர்ச்சி அலைகளைப் பாய்ச்சி
பொற்பணி தொடங்கினர் நற்றமிழ்த் தொண்டர்.

சரித்திர வெள்ளம் புரண்டது; அலைகள்
தமிழனை எங்கோ ஒதுக்கின கரையில்;
எரித்தது வெம்மை, விழிகளைத் திறந்தான்;
ஏளனச் சிரிப்பை உதிர்த்தனர் மக்கள்;
புருவந் தூக்கி மக்களைப் பார்த்தான்;
புதியவ ரல்லர் பழகிய வர்தாம்;
சிரித்திடும் இலங்கைத் தீவினர் முன்னே
செயலற் றவனுய்த் திகைத்தான் தமிழன்.

உரிமையைக் கேட்டுப் போரிட வில்லை;
ஒளிபுனல் இலங்கை தனதெனக் கூறி
வரிப்புலி யாகப் பாய்ந்திட வில்லை;
வன்செயல் ஏதும் புரிந்திட வில்லை;
அரியணை மீது தமிழ்மொழி ஒன்றே
அமரவேண் டுமென உரைத்திட வில்லை,
எரிவிழி காட்டிச் சினந்திட வில்லை;
இலங்கையைக் கவிழ்க்கச் சதிசெய வில்லை.

சிங்கள மொழியுடன் தமிழும் சேர்ந்து
செழித்திட வேண்டும் என்றுதான் சொன்னன்;
இங்கென குறையை இலங்கையர் கண்டார்?
எரித்தனர் விழியால் தமிழரின் உளத்தை;
தங்கத் தமிழைச் சிதைத்திடும் பணியில்
தாவிக் குதித்தனர்; தடுத்தனர் தமிழர்;
எங்கள் உடலில் உயிருள வரையில்
எதிர்ப்போம் என்று முழங்கிய தவர்வாய்!

துடித்தது தடந்தோள்; புடைத்தது நாளம்;
தொடங்கினர் அறப்போர் உரிமையைக் காக்க,
முடிந்தது காதை என்றவர் நெஞ்சில்
முளைத்தது புதிய வேதனைக் கட்டம்;
வெடித்தது வேட்டு; வடிந்தது குருதி;
வெருண்டிட வில்லை; எதிர்த்தனர் துணிந்து;
அடித்தவர் திகைத்தார்; சிறையினில் அடைத்தார்;
அஞ்சிட வில்லை புலிநிகர்த் தமிழர்!

அறநெறி வெல்லும்; அருள்நெறி வாழும்;
அல்லவை புரிவோன் தொல்லைகள் சூழ்வான்;
குறள்நெறி ஓங்கும்; தமிழ்மணம் கமழும்;
கொடுமையை விதைப்போன் கொடுமையை அறுப்பான்
திறமையை நம்பும் இலங்கைத் தமிழர்
செயல்திறம் வெல்லும்; புகழ்மணம் பரவும்;
சிறையினில் அடைத்தால் தமிழனின் உணர்ச்சி
செத்திடு மோ?இதைச் சிந்தனை செய்வீர்!

# சம்பத்தின் புதிய கட்சி

பால் சம்பந்தமான அருவருப்பான உதாரணங்களையும், காமக் கிளர்ச்சி யூட்டும் கதைகளையும் சொல்லி அரசியல் பேசிக் கொண்டிருந்தோரிடையே அவைகளையெல்லாம் மறந்து முழுக்க முழுக்க தர்க்க ரீதியான அரசியலை அசைக்க முடியாத ஆதாரங் களுடன் முழங்கி தனித்தன்மையுடன் இலங்கி மாற்றுக்கட்சி யினரின் இதயத்தில் தனியிடம் பிடித்துக்கொண்டவர் திரு. ஈ. வெ. கி. சம்பத். அத்தகைய திரு. சம்பத், திராவிட மாயையிலிருந்து விலகி, பிரத்தியட்ச உணர்வுடன் புதிய அரசியல் கட்சியினை உருவாக்கியிருப்பதை மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்புக்கட்சியாக இராமல் எதிர்கட்சியாக சிறப்பான முறையில் பணிபுரியுமென நம்புகிறோம்.

பத்தாண்டுகளாக தாம் முழங்கிவந்த ஒரு கருத்தை தவறென புரிந்துகொண்டதும், அதற்குள்ளேயே அழுந்திவிடாமல், தன்னை ஏமாற்றியதுடனல்லாமல் மக்களையும் ஏமாற்றிக்கொண்டிராமல் அழுகிப்போனவைகள் என்று தூர எறிந்துவிட்டு கர்ம வீரரைப் போல தான் கட்டிய கோட்டையைவிட்டு வெளியேறும் உணர்வு அசாதாரணமானதல்ல!

டெல்லி அசோக் ஓட்டலில் பத்து லட்சம் தரப்பட்டது என்பது போன்ற வதந்திகளையும், தலைமைப் பதவி கிடைக்கவில்லை ஓடி விட்டான் என்று தூற்றுவதுமூலமும், காலித்தனம் செய்து செருப்புகளை வீசி எறிவதாலும், சம்பத்தின் புதிய கட்சியை அடக்கிவிட முடியாது.

திரு. சம்பத் சொன்னதைப்போல, இந்த வதந்திகளை ஏவி விட்டவர்களை இது ஒரு சிலதினங்கள் பாதுகாத்துக்கொள்ள உதவு மேதவிர, சம்பத்தின் கட்சியைக் கலகலக்க வைத்துவிடமுடியாது.

சம்பத் வெளியேறியது ஆச்சரியமல்ல! சம்பத் போன்றவர் கள் எப்படி உள்ளே புழுங்கி கிடந்தனர் என்பதுதான் மிகமிக ஆச்சரியம்!

சம்பத் கட்சியிலே உள்ள 'பிரிந்துபோகும் உரிமை' என்ற கருத்து நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாதது!

இருந்தாலும், ஒரேயடியாக பிரிவினை என்று இது நாள்வரை கத்திவிட்டு, திடீரென்று ஒரேயடியாக கைகழுவி விடுவது மிகவும் கடினமானதாகும்.

நாளடைவில் சம்பத்தின் புதிய சிந்தனை வளர வளர, அறிவு முதிர்ச்சியடைய இந்த விதியினை அவர் தளர்த்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கலாம்!

சம்பத் கட்சி ஒரு புதிய காங்கிரஸ் கட்சி என்று ஒரு தி. மு. க தலைவர் கூறியிருப்பது ஆழமான ஒரு உண்மையாகும்.

காங்கிரஸ் கட்சியைப் போன்ற இலட்சியப் பிடிப்புடன், புதிய உணர்வுடன் பிரதியட்ச உணர்வுடன் சம்பத் கட்சி உருவாகியிருப் பதைக் கண்டு மிகவும் மகிழ்கிறோம்.

சம்பத்தின் புதிய கட்சி ஒரு கட்சியல்ல! அது ஒரு புதிய சிந்தனை; வாழட்டும் வளரட்டும்!

**"உதயம்" மே-இதழ் இப்படி விமர்சித்திருக்கிறது.**

## அண்ணாவைப் பற்றிச் சிந்தனைச் சிற்பி!

"எப்போதும் கூட்டங்களுக்குத் தாமதமாகவே வரு கிறார். வரலாற்றிலே இவர் ஒருவரைத்தான் நாம் இப்படி சந்திக்கிறோம். இந்த நிலை பலருக்கு எரிச்சலை உண்டாக்கு கிறது.

தவறு செய்கிற யாரையும் நேரில் கண்டிக்கிற குணம் அவரிடம் அறவே இல்லை என்று சொல்லிவிடலாம். இதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடுமென்று நாமே யூகிக்க வேண்டியிருக்கிறது.

இது சில நேரங்களில் வளர்ந்துவரும் இயக்கத்திற்குக் கேடு பயப்பதாயிருக்கிறது. ஆகவே அவருக்கிருக்கும் ஆற்றலை மிகத் தைரியமாகப் பயன்படுத்துவார் என்று நம்மைப் போன்றவர்கள் நினைப்பதில் தவறில்லையல்லவா?

ஆகவேதான் கட்சியின் வளர்ச்சிக்கு மிகத் தேவைப் படுகிற அவரது பேச்சும் எழுத்தும்போலவே, நிர்வாகத் துறையிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று எதிர்பார்ப்பது இயக்க வளர்ச்சிக்கு அன்றாடம் உழைத்துக் கொண்டிருக்கிற ஒவ்வொருவருடைய நீங்காத ஆசை என்பதை எடுத்துக்காட்ட வேண்டியவர்களாக இருக் கிறோம்.

**1960 இனமுழக்கம்-பொங்கல் மலர்.**

# வரலாறு

11-9-1938

**தமிழ்நாடு தமிழருக்கே**

என்றுநாம் பரணிபாடினேம்.

27-12-1938

வேலூர் தமிழர் மாநாட்டில்

**தமிழ்நாடு எதிர்காலத் திட்டம்**

பேசப்பட்டது

29-12-1938

சென்னை, ஜஸ்டிஸ் மாகாண மாநாட்டில்

**தமிழ்நாடு தனிநாடு**

ஆகவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

10-12-1939

**தமிழ்நாடு தமிழருக்கே**

என்ற திட்டத்தை நாட்டு மக்களுக்கு விளக்க விழாக் கொண்டாடப் பட்டது,

2-7-1940

காஞ்சிபுரத்தில் **திராவிடநாடு** பிரிவினைக்குக் கமிட்டி நியமிக்கப் பட்டது

24, 25-3-1940

திருவாரூர் மாகாண மாநாட்டில்

**திராவிடநாடு தனிநாடாக**

வேண்டும் என்ற திட்டம் தீர்மான மாயிற்று.

20-8-44

மாகாண சேலம் மாநாட்டில்

**திராவிடநாடு தனிநாடாக**

வேண்டுமென்பது, கட்சியின் மூலதாரத் திட்டமாக்கப் பட்ட துடன், கட்சியின் பெயரே **திராவிடர் கழகம்** என்று மாற்றப் பட்டது.

29-9-45

திருச்சியில், மாகாண மாநாட்டில்

**திராவிடநாடு தனிநாடாக**

வேண்டும் என்பது மீண்டும் வலியுறுத்தப் பட்டது.

1-7-1947

**திராவிடநாடு பிரிவினை**

நாள் கொண்டாட்டம்.

29-6-47-'திராவிடநாடு' இதழ், 7-ம் பக்கத்திலிருக்கும் வரலாறு இது.

11-8-1938 ல் தமிழ்நாடு தமிழருக்கே என்று பரணி பாடியவர்கள்தான், 27-12-1938 ல், தமிழர் மாநாட்டில் தமிழ்நாடு எதிர்காலத் திட்டம் பற்றிப் பேசியவர்கள்தான். 29-12-1938 ல் தமிழ்நாடு தனிநாடு ஆகவேண்டுமென்று வற்புறுத்தியவர்கள்தான், 10-12-1939 ல் தமிழ்நாடு தமிழருக்கே என்ற திட்டத்தை விளக்க நாட்டு மக்களுக்கு விளக்க விழாக் கொண்டாடியவர்கள் தான், 20-8-1944 ல் கட்சியின் பெயரையும், திராவிடர் கழகமாகமாற்றி, கட்சியின் லட்சியத்தையும் திராவிட நாட்டுக் கோரிக்கையாக மாற்றினர்.

முதல் முழக்கமாகிய 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற கொள்கையை மாற்றிக்கொண்டு— இடைமுழக்கமாகிய' 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற கொள்கையையும் முழக்கத்தையும் அமைத்துக்கொண்டது சரியென்றால், இடை-முழக்கமாகிய 'திராவிடநாடு திராவிடருக்கே' என்பதை உதறிவிட்டு 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றுமுழங்குவது எப்படித் தவருகும்.

அரசியல் தோல்வியால் ஆத்மநியாயங்களை மறந்து பேசும் நண்பர்களே-தயவு செய்து நீங்கள் நடந்து வந்த பாதையை ஒருமுறை திரும்பிப் பாருங்கள். உண்மையை எப்போதும் மறைக்க முடியாதென்னும் உண்மை, உங்களுக்குப் புரிந்தேதீரும்.


**தமிழ்த் தேசியக் கட்சி**

**55வது வட்டம்**

**துவக்கவிழாப் பொதுக் கூட்டம்**

7-5-61 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு நுங்கம்பாக்கம் ஏரிமைதானத்தில் நடைபெறும்.

தலைவர்: தோழர். வ. சங்கரநாராயணன்

பேசுவோர்: தோழர், ஈ. வெ. கி. சம்பத்
மேயர், வி. முனுசாமி
தோழர், கண்ணதாசன்
,, ஏ. கே. வில்வம்
,, தி. மணிவண்ணன்
,, க. முருகேசன்
,, ஆர். சம்பந்தன்

அனைவரும் வருக! வருக!


# திருப்பத்தூர் தமிழ்த் தேசியக் கட்சித் தோழர் தாக்கப்பட்டார்

முகவை மாவட்டம், திருப்பத்தூரில் பெருமளவில் தமிழ்த் தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தி. மு. கழகத்திலிருந்து விலகிய தலை சிறந்த ஊழியர்களான மரி. செபத்தி, சோ. பரமசிவம், நாகராசன் முதலியோருடன் ஏராளமான தோழர்கள் இப்பணியில் ஈடுபட்டிருக்கிருர்கள். இவர்களில் தோழர் சோ. பரமசிவம் அவர்களை இரண்டு தினங்களுக்கு மூன் தி. மு. கழகத்தைச் சேர்ந்த சிலர் வழி மறித்து முகத்திலும் மார்பிலும் கடுமையாகத் தாக்கியிருக்கிருர்கள். அண்மையில் நடை பெற்ற தி. மு. கழகக் காலித்தனங்களில் இது பதினேழாவது நிகழ்ச்சி. இருப்பினும், திருப்பத்தூர் த. தே. க. தோழர்கள் கொஞ்சமும் தளர்ச்சியின்றி நகரின் பலபாகங்களிலும் கொடியேற்றி வருகிருர்கள்.

தி. மு. கழகத்தின் துணை மன்றமாக இயங்கி வந்த **கண்ணதாசன் படிப்பகம்,** இப்போது தமிழ்த் தேசியக் கட்சியின் துணைமன்றமாக ஆகிவிட்டது. தி. மு, கவைச் சேர்ந்தவர்கள் இந்தப் படிப்பகத்திலும் நுழைந்து, அலமாரியைத் தூக்கிச் சென்றிருக்கிருர்கள். இது கண்டு நகரத்தின் பொது மக்கள் அனைவரும், தமிழ்த்தேசியக் கட்சியிடம் அனுதாபம் கொண்டுள்ளார்கள்.

திருப்பத்தூர்தி.மு.க,விலிருந்த உண்மையான ஊழியர்கள்அனைவரும் தமிழ்த் தேசியக் கட்சிக்கு வந்து விட்டார்கள். கிருங்காக் கோட்டை போன்ற ஊர்களிலும் தி. மு. கழகம் கலைக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கட்சி இயங்கி வருகின்றது.

திருப்பத்தூர் வட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கட்சித் தோழர்கள், தோழர் மரி. செபத்தி அவர்களோடு தொடர்பு கொண்டு, வட்டம் முழுவதிலும் கிளைக் கட்சிகள் அமைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

## திருச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கட்சி அமைப்புக் கூட்டம்.

*அன்புடையீர்*

*நாளது 14-5-1961 ஞாயிறு காலை 10 மணி அளவில், திருச்சி, சங்கரம்பிள்ளை சத்திரம் ரோடு கருணுநிதி பூங்காவில் நடைபெறும். அதுசமயம் தங்களின் உறுப்பினர் சீட்டுடன் வருகைதர வேண்டுகிறேன்.*

*அன்பன்,*
*மு. பெ. முத்துக்கருப்பன்*
*மாவட்ட அமைப்பாளர்.*

# இலங்கையில் தமிழ்த் தேசியக் கட்சி

இலங்கையில் இயங்கி வரும் தி. மு. கவைப் பற்றிநாம் அவ்வளவாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் தமிழகத்திலிருக்கும் தலைவர்கள் அண்ணு உட்பட, இலங்கைக்கு விஜயம் செய்த தலைவர்கள் அனைவரும் அதன் சீர் கேடுகளைப்பற்றி அறிவார்கள். இவர்கள் விஜயம் செய்த பொழுது எவ்வளவோ முயற்சிகள் எடுத்து இயக்கத்தை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வர முயன்ருர்கள்.ஆனுல் அந்தப் பதவிப் பித்தர்களின் வெறியைத் தணிக்க இவர்களால்முடியவில்லை, நான்கு பொதுச்செயலாளர்களைக் கொண்ட ஒரே இயக்கம் ஒரே நாட்டில் இருப்பது விந்தைக்குறிய செயல். மலைநாட்டு பாமரத் தொழிலாளரிடம் இவர்கள் மாநாடு என்று கூறி நிதி திரட்டி அவர்களைக் கொள்ளையடிப்பது அதைவிட விந்தைக்குறிய செயல். எழுச்சி பெற்ற தங்களைக் காக்க தங்களது மொழி பிரஜா உரிமைக்காக போராட வேண்டிய வாலிபர்களை, அவர்களது ஆர்வத்தை, உரிமை யுணர்வை, ஒரே அமைப்பிற் செயல்பட வழிவகுக்காமல், பதவி வெறியால் அழிந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை இனிமேலும் வளருமாளுல் இலங்கையில் எழுபதுசதவிகித பொருளாதாரத்தை தங்களது இரத்தத்தால் வளர்க்கும் மலைநாட்டு மக்கள், தமிழ் மக்கள் அடிமைகளாக வாழ நேரிடும். ஆகவே, நமது உரிமையைப் பெற, நாம் இந்நாட்டிலே தலை நிமிர்ந்து நடக்க சம்பத் காட்டிய பாதையிலே ஒரே அமைப்பில் ஒன்று திரளுவோம். கடைசியாக நமது வழிகாட்டி சம்பத் கூறியதுபோல, இலங்கைவாழ் தமிழ் பேசும்மக்களே, நாம் நமது மொழியுரிமை, பிரஜா உரிமை ஆகியவற்றைப் பெற உயர்ந்த இலட்சியங்களுக்காக வாழும்வாலிபர்களே, கொள்கைப் பற்ருேடு பொதுப்பணி புரிய மட்டும் கழகத்தில் சேர்ந்தவர்களையும் தோழமையோடு அழைக்கிறேன்-விலகி வாருங்கள். மனத்தூய்மைக்கும் இலட்சிய உள்ளத்திற்கும், மதிப்பளிக்கும் விரிந்த உலகம் நம்மை அணைத்துக் கொள்ளும். முன்னேற்றக் கழகமே நமதுலகம் என்றெண்ணிய மயக்கத்திலிருந்து விடுபட்டு உண்மையான நாட்டுப்பணி புரிய புதிய பாதையை வகுத்துக் கொள்வோம் வாருங்கள் என அழைக்கிறேன்,

அன்புள்ள,
**தென்றல் மலைத்தம்பி, இலங்கை.**

# அன்புள்ள கண்ணதாசனுக்கு,

நல்ல தமிழ்பாடி, நாளும் மொழிவளர்த்த
வெல்லக் கவிஞா ! விரிபுகழோய் !—அல்லும்
பகலுமுனைப் பாடிப் பணிந்தளமை விட்டே
அகலுமுனை வாழ்த்துகிறேன் ஆய்ந்து !

எங்கு தவழ்ந்தாலும் எவ்விடத்தி ருந்தாலும்
தங்கத் தனிமழனைத் தண்,ஒருவர்—பங்காமோ ?
பொங்கு தமிழெடுத்து, பூதொடுத்த மாலைபோல்
அங்கிருந்தே பாட்டெடுப் பாய் ஆர்ந்து !

காதலனைச் சேரக் கதவடைத்த பெற்றவரைச்
சோதனையி லாக்கத் துணிந்தவள்போல்—மாதவனே !
ஓடிப் பிரிந்தாய்; உறைந்த இடத்தும்நீ
பாடித் தவழ்வாய் படர்ந்து !

கண்ணனின் தாசன் கழகத்தின் பாணனென
எண்ணி இறுமாந் திருந்தேம்யாம்—பண்ணனையாய் !
எம்மவரின் இல்லம் இழந்தாலும் எண்ணங்கள்
விம்மிடுதுன் பாவுறைய வே !

பாரதியின் தாசன் பறிபோனர்; விண்குவியும்
காரதிரப் பாடுமுனை கண்ணில்வென்—நீரதிர
இன்னுள் இழந்திட்டோம்; என்ருலும் பண்தமிழில்
என்னுளும் வாழ்வாய் இழைந்து !

— நாஞ்சில் ஆ. ஆரிது.

❁

அன்புமிக்க கவிஞர் கண்ணதாசன் அவர்கட்கு,

தமிழ்த் தேசியக் கட்சியில் நான் உறுப்பினர் ஆகி நான்கு நாள் ஆகிவிட்டது.

என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தமிழ்த் தேசியக் கட்சிக்கு 24-4-61 முதல் கொடுத்துவிட்டேன். காரணம், நமது கட்சியின் "தமிழ்நாடு தன்னுட்சி உரிமை" கொள்கையும், அதைப் பற்றி தெள்ளத் தெளிய தலைவர் சம்பத் அவர்கள் எடுத்துக் கூறியதும்தான்.

உள்ளத்திலே கள்ளம் இல்லையென்ருல், உண்மை ஒளி உண்டாகிவிட்டால், 3½ லட்சம் பேர் உள்ள தி. மு. க. உறுப்பினர் மத்தியில் "தமிழ் தாடு தமிழருக்கே" என்ற தமிழ்த் தேசிய முழக்கம் செய்ய முடியும் என்பதையும் அதனுல் திராவிட மாயையிலிருந்து 3½ லட்சம் பேர்களையும் விழிப்படையச் செய்து தமிழ்த் தேசியஉணர்வடையச் செய்து நாம் தன்மானம் மிக்கதமிழ்களாக வாழமுடியும் என்பதனையும், திராவிட நாடு கொள்கை எத்தனை ஆண்டுகளாளுலும் நடக்காது; கிடைக்காது என்பதனையும் தமிழ் நாடு கொள்கை நடக்கும் விரைவில் கிடைக்கும் என்பதனையும் நான் தெளிவாக அறிந்துகொண்டேன், திடமாக நம்புகிறேன். திராவிடநாடுபற்றி ஆராய்ச்சி, அதைப்பற்றி கொள்கை விளக்கம், நாம் ஒத்துக்கொள்வதுபோல் மற்ற மூன்று மாநிலமும் ஒத்துக் கொள்ளவில்லைஎன்பதனையும், நமக்கு ஏற்படுவது எல்லாம் தமிழ்த் தேசிய உணர்வு ஒன்றுதான் ! திராவிட உணர்வு இல்லை என்பதையும் ஆராய ஆராய நம் உள்ளமே நமக்கு பதில் சொல்கிறது, நிற்க.

27-4-61 அன்று சூளை தட்டான்குளம் பகுதியில், சென்னை 37 வது வட்டத்தில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் பேசும்போது நம் தலைவரையும் பிரிந்துசென்ற நம்மையும் கேட்போர் நெஞ்சம் நெக்குருக இழித்தும் பழித்தும் பேசினுர். மக்களும் அதைக் கேட்டுச் சென்றனர். நாம் பிரிந்து வந்ததையும் திராவிடநாடு திராவிடருக்கே என்றநாக்கு தமிழ்நாடு 'தமிழருக்கே'' என்று முழங்கியது பற்றியும் அறிஞர் "அண்ணு" என்று அழைத்தவர் திரு, அண்ணுத்துரை என்பது பற்றியும்தான் கேலியும் கிண்டலுமாக நம்மை ஏசிப் பேசி மக்களின் மனதைமாற்றும் வகையில் பேசினுர். நாவன்மை உள்ளவர்கள் பொய்யை மெய்யாக ஆக்கும் வன்மை படைத்தவர்கள் என்பதை நான் உணர்ந்தேன். "தமிழ்நாடு தமிழருக்கே" என்பதைப்பற்றி ஒன்றும் அவர் மறுப்பு கூறவில்லை ! அதற்கு அவர் நாவன்மையால் கூட முடியாது-காரணம் அழுத்தம் திருத்தமானது நம் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற லட்சியம். இந்தக் கொள்கையைமறுத்து பதில்கூற தி.மு.க. தலைவர்கள் யாராலும் முடியாது.

நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்பதை, திராவிட நாடு கிடைக்காது என்பதை மறுத்துக் கூறிவிட்டோம். இன்னும் கூறப் போகிரேும் பலமேடைகளில், மக்கள்சிந்தித்துப் பதில் கூறத்தான் கொஞ்சம் நாள் ஆகும். ஆகட்டும், மெள்ள மெள்ள நம் கொள்கையைப் பரப்புவோம் தமிழ், தமிழர், தமிழ்நாடு, வாழ்க.

—அ. ராகவன்.

ஆசிரியர் அவர்கட்கு வணக்கம் !

ஐயா !

அடியிற் கையொப்பமிட்டு இருக்கும் நாங்கள், கடலூர் ஒ. டி. 4-வது வட்ட தி. மு. கழகத்தின் செயற்குழு உறுப்பினர்களாக பணியாற்றி வந்த நாங்கள், தற்காலம் தி. மு. கவின் போக்கும் அதன் தலைவர்களது தான்தோன்றித்தனத்தையும் உணர்ந்து 25-4-61 முதல் தி. மு. கவிலிருந்து விலகிக்கொண்டோம்.

26-4-61 முதல் தமிழ்த் தேசியக் கட்சியின் உருப்பினர்களாகி கடலூர் ஒ. டி. தமிழ்த் தேசியக் கட்சியின் கொடியேற்றி வைத்து மிட்டாய் வழங்கியுள்ளோம். விரைவில் கடலூர் ஒ. டியில் ஏராளமான உறுப்பினர்களுடன் தமிழ்த்தேசியக்கட்சியை நிறுவும் பணியில்ஈடுபட்டுள்ளோம் என்பதை இதன்மூலம் அறிவித்துக்கொள்ளுகின்ரேும்

பி. ராமானுஜம், இ. அமீர்ஜான்,

❁

அன்புள்ள கண்ணதாசன் அவர்களுக்கு வணக்கம்,

தங்களது நெஞ்சையுலுக்கும், "கதை முடிந்தது; கட்சி பிறந்தது" என்ற உள்ளக் குமுறலை ஒருமுறையல்லாது பலமுறை படித்தேன். பன்னிரண்டு ஆண்டுக் காலமாக எப்படித்தான் பல்லைக் கடித்துக்கொண்டு, காளிக்குப் பூஜை போட்டுக்கொண்டு வந்தீர்களோ ? தமிழர்களுக்குத் தைரியம் சற்றுத் தாமதம்தான் என்று நினையாமல் வேறென்ன நினைப்பது ? ஏதோ பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தாவது 'காளி'யின் உள்ளக்கிடக்கையையும் ஓரவஞ்சனையையும், கடுகடுப்பையும், கொள்ளைக்கூட்ட உத்வேகத்தையும் வெட்டவெளிச்சமாக்கினீர்களே, அது ஒன்றே போதும்.

—பி. திருவேங்கடம், அயனுவரம்.

❁

கண்ணதாசன் அவர்கட்கு வணக்கம்,

தோழர் ஈ. வி. கே. சம்பத் தலைமையின்கீழ் துவங்கியுள்ள கட்சியுடன்நீங்களும்இணைந்தமைக்குஎண்ணிலாமகிழ்ச்சி. உம்மையும், தோழர் சம்பத்தையும் வாழ்த்துவடன் மற்றும் எண்ணற்ற தமிழ்த் தேசியக் கட்சி தோழர்கட்கும் என் நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக. உயர்வு தாழ்வு பேதமின்றி, உள்ளன்போடு தமிழ் நாடு தமிழருக்கே என்ற உரிமையோடு உண்மையோடு பாடுபடுக! என வேண்டுகிறேன் அனைவரையும்.

அது மட்டுமன்றி என்னையும் தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினருக சேர்த்துக்கொள்ளுமாறு இன்று தோழர் ஈ. வெ. கே. சம்பத்திற்கும் ரிப்ளே கார்டுமூலம் எழுதிக் கேட்டுள்ளேன்; என் எண்ணத்தையும் கூறியுள்ளேன் வணக்கம்.

—அ. ஆறுமுகம், விளந்தை.


வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
**எங்கும் பிரசித்தி பெற்ற**

## இராஜாளி எண்ணை

எந்த மருந்திலுைம் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை. மஞ்சள், ரத்தசீழ் வெள்ளை, நீரடைப்பு. நீர்க் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி, நரம்புவலி, வீக்கம், சொரி, சிரங்கு, ஊறல், படை, கிரந்தி புண், கைகால் பிடிப்பு, தந்திசூலை, நாபிரணம். கெர்ப்பரணம், முதலிய மிகக் கொடியமேகவியாதிகளை மறுமுறை வராதபடி வேரற நீக்கக்கூடிய மருந்து.

(மூலிகைகளினுல் தயாரிக்கப் பெற்றது)

நாள்பட்ட வியாதிக்கு நெ. 1. 4 அவுன்சு ரூ. 7-00
ஆரம்ப வியாதிக்கு நெ. 2. ,, ரூ. 5-00

—: தேவைக்கு எழுதவும் :—

இராஜாளி எண்ணை டிப்போ.
அரிசிப்பாளையம். சேலம்-2.

சென்னை நகரில் கிடைக்குமிடம் ;

வ. செயச்சந்திரன்
நெ. 4/37. சவுரிமுத்து தெருவு. மண்ணடி சென்னை-1.

# அண்ணா கேட்ட தமிழ் நாடு

[அண்ணா அவர்கள், இன்று தாசராக உள்ள தமிழர் (திராவிடரல்ல) பரணி பாடித் தரணி ஆண்டவர் என்றும், தரணி ஆண்ட காலத்திலே தன் மானத்தை ஓம்பினவர் என்றும், **அடக்கியாளும் ஆணவமும், சுரண்டிப் பிழைக்கும் சூதுமதியும்** இல்லாதவர் என்றும், அவர்கள் தம்மை **உணரும் தன்மை** பெற்று விட்டால் **"கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே"** என்று வீராவேசத்துடன் கிளம்புவர் என்றும் **தமிழா! நீ தனி இனம்! தமிழா நீ தரணி ஆண்டவன்! தமிழா உன்னை நீ உணராமல் உலுத்தருக்கு அடிமையானாய்! பகுத்தறிவுப் படை தொடு! விடுபடு!** என்று **தமிழரைத்** தட்டியெழுப்பியும், **தமிழர்** மட்டுமே ஒரு நாட்டை ஆள முடியும் என்று சுட்டிக் காட்டியும், எழுதியிருக்கும் கட்டுரை இது: காலத்தால் அழியாத கருத்துக் கருவூலமாகிய இதை 3-1-1945 "திராவிட நாடு" தலையங்கமாகத் தந்திருக்கிறார் அண்ணா. படியுங்கள்; படித்துத் தெளியுங்கள்.]

**"தமிழர்கள் மட்டுமே தேசத்தை ஆளலாம் என்ற தைரியம் ராமஸ்வாமி நாயக்கருக்கு இருக்கிறது. அதிலே தவறில்லை. அயர்லந்து, நம் மாகாணத்தில் 16ல் ஒரு பங்கு இருக்கிறது. டிவேலரா சுயராஜ்யம் நடத்தவில்லையா? தைரியமிருந்தால் நடத்தலாம்."**

என்று அன்பர் ஆச்சாரியார், மே (1945) 28ந் தேதி மாலை சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பேசினார். ஆச்சாரியாரின் பேச்சிலே, உபநிஷத்துக்களுக்குள்ளது போன்ற உட் பொருள் உண்டு என்பது அரசியலில் உள்ளவர் அனைவருக்கும் தெரியும். குல்லுகபட்டர் என்ற பட்டம் அவருக்குண்டு. அது கேவலம் கேலிக் குறிப்பல்ல.

தமிழர்கள் மட்டுமே, என்ற தொடரிலே, மட்டுமே என்பது ஒரு கண்ணியாக அமைந்திருக்கக் கூடும், தைரியம் என்ற வார்த்தையிலே ஏதேனும் புதை பொருள் இருக்கக் கூடும். தவறில்லை என்பதிலே கூட எதையாவது திணித்திருப்பினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தொடர்களுக்குள் புகுத்தப்பட்டிருக்கும் பொருள் கிடக்கட்டும். அந்த வாசகத்தின் முழு நோக்கமே கூட, இனப் பண்புக்கு ஏற்ற ஒரு வெடி வீச்சாக இருக்கக் கூடும்.

எது எப்படி இருப்பினும், ஆச்சாரியார், எந்தக் கருத்தைக் கொண்டு, எந்த நோக்கத்துக்காக இதைக் கூறி இருப்பினும், நாம் அவருடைய சிந்தனையை இழுத்து அவர் சொல்லித் தீர வேண்டியதாகி விட்'. தமிழர் ஆட்சி என்ற பிரச்னையை அவர் புரிந்து கொண்டிருக்குமளவு நமது உடன் பிறந்தவர் உணரவில்லையே என்பதை எண்ணியே உளம் வாடுகிறோம்.

ஆரியரின்றி நாம் நாடாள முடியும்! தமிழர் மட்டுமே என்றால் அதுவே உண்மையான பொருள், ஆச்சாரியாரும் அவரது சீட கோடிகளும் கூட அதை அறிவர். வேண்டுமென்றே மன்றங்களிலே பேசுவர். தமிழர் என்றால் தமிழகத்திலே பிறந்து தமிழ் பேசும் அனைவரும் தமிழரே என்று, ஆனால் உள்ளூர உணர்வர். தமிழர் என்றால் தமிழ் மொழியினர் என்பது மட்டுமல்ல, மொழி விழி, வழி, மூன்றிலும் தமிழர்! நோக்கம் நெறி இரண்டும் தமிழருக்குத் தனி. ஆரிய நோக்கம் வேறு, மார்க்கம் வேறு. தமிழர் எனில் தனி இனம் என்ற கருத்தே தவிர, மொழியிலே மட்டுமல்ல. எனவே ஆச்சாரியார் தமிழர் மட்டுமே என்று கூறினதன் பொருள், ஆரியரின்றித் தமிழர் மட்டுமே இன அரசு நடத்த முடியும் என்று விரியும். இதைத்தான் உண்மையில் பெரியார் விரும்புகிறார், ராமஸ்வாமி நாயக்கருக்குத் தைரியமிருக்கிறது— என்று கூறும் ஆச்சாரியார், எப்படி அந்தத் தைரியம் பெரியாருக்கு இருக்கிறது என்று அறிந்திருக்கிறாரோ இல்லையோ நாமறியோம். எனினும் அந்தத் தைரியம் இருப்பதற்குள்ள காரணத்தைக் கூற விரும்புகிறோம். எதிர்த் தரப்புக்கானவைகளையே முதலில் எடுத்தாராய்வோம். தமிழர் என்பதற்கு இன்று எதிர்த்தரப்பினர் கூறக் கூடிய குறைகள் ஏராளம்.

எப்படிப்பட்ட தமிழர்? ஜாதியால் மதத்தால் பேதப்பட்டுக் கிடக்கும் தமிழர்! கல்விலே பிற்போக்கடைந்துள்ள தமிழர்! கண்டவன் கைப் பிடித்திழுக்கும் கேவல நிலைக்கு வந்து விட்ட தமிழன்! தரணி இழந்து, பரணி மறந்து தாசனாகி ஏசுதலைத் தாங்கித் தவிக்கும் தமிழன்! மொழி சிதைந்து பழி மிகுந்து. கழி கொண்டோன் காட்டும் குழியிலே குதிக்கும் குணங் கொண்ட தமிழன்!.........தன் இனம் பிற இனம், தன் மொழி பிறமொழி எனும் பாகுபாடுணர முடியாத நிலையிலே உள்ளான் தமிழன். நெஞ்சு உரத்தை மங்க வைத்துக் கொண்டிருக்கிறான் தமிழன்.

ஆரியருக்குக் களிப்பூட்ட இந்தப் படப் பிடிப்பு போதும் என்று கருதுகிறோம். போதாதெனில் இன்னமும் சில பல சேர்த்துக் கொள்ளட்டும், நாம் மறைக்காமல் கூறுகிறோம், இன்றையத் தமிழர் இழிநிலையிலே உள்ளனர், இம்மியும் இதிலே எமக்குச் சந்தேகம் இல்லை.

இப்படிப்பட்ட தமிழரைக் கொண்டு தான், தனி அரசு அமைக்க முடியும் என்று பெரியார் கருதுகிறார். ஆச்சாரியார் மொழியிலே கூறுகிறோம் "ராமஸ்வாமி நாயக்கருக்குத் தைரியமிருக்கிறது"

எப்படிப்பட்ட தமிழர் என்பதை விளக்கினோம். இனி, ராமஸ்வாமி நாயக்கர் எப்படிப் பட்டவர் என்பதை எதிர்த்தரப்பினர் கூறக்கூடும், என்பதை அவர்களுக்கு வேலை வேண்டாம் என்பதற்காக நாமே கூறுகிறோம்.

கல்லூரி காணாத கிழவர், காளைப் பருவ முதல் கட்டுக்கடங்காத கிழவர், அரசியல் நோக்கத்துக்கான முறையிலே கட்சியமைப்பு இருக்க வேண்டுமென்று விரும்பாத கிளர்ச்சிக்காரர்... தேர்தலா? வேண்டாம். பதவியா? கூடாது. எதைக் கண்டார்? எட்டுத் தடவை சிறை போய் வந்தார். இவர் தானய்யா ராமஸ்வாமி நாயக்கர்.

தாசரான தமிழர்! கிழவரான கிளர்ச்சிக்காரர்! சரி இப்படிப்பட்ட இராமசாமி, எப்படிப்பட்ட தமிழரைக் கொண்டு எப்படிப்பட்ட காரியம் செய்ய முடியுமென்று தைரியம் கொண்டிருக்கிறார்.

தமிழர்கள் மட்டுமே தேசத்தை ஆளலாம் என்ற தைரியத்தை கொண்டிருக்கிறார். எப்படி?

எப்படி எனில், அவர் ஓர் மாயாவி! ஜால வேடிக்கைக்காரர்! "வேடிக்கை பேசாதே' என்று கூறுவீர். வேடிக்கையல்ல நாம் கூறுவது, தாசரான தமிழரைக் கொண்டு, வெறும் கிளர்ச்சிக்காரராக்கி ஒருவர் தேசத்தை ஆளலாம் என்ற தைரியம் கொண்டுள்ளார் என்றால், மாய வித்தை தெரிந்தவராக இருந்தாலன்றி எப்படி முடியும்?

இதனால் இது ஆகுமோ? என்ற கேள்விக்கு இடமுண்டோ இங்கு? மண்ணிலே தங்கம் ஏது? கடலிலே முத்து ஏது? தட்டுத்தடவலிலே இன்பம் ஏது? வர்ணத்திலே சிருஷ்டி ஏது? எப்படி முடியும்? என்று தொழிலாளி, இசைவாணன், ஓவியக்காரன் ஆகியவர் களைக் கேட்டால் அவர்கள் நகைப்பர்.

என்னே இவன் குறைமதி என்று எள்ளி நகையாடுவர். மண்ணுக்குள்ளே நெடுந்தூரத்திலே புதைபட்டுக் கிடக்கும் பொன், இருக்குமிடமும் எடுக்கும் விதமும் பாட்டாளி அறிவான். தெரியாதான் இதிலே இதுவா, எப்படி? என்று கேட்பான் பெரியார் ராமசாமியின் பெரும்படை இது போன்றதே. அவர் அறிவார், தாசராக உள்ள தமிழர் தரணி ஆண்டவர் என்பதும், தரணி ஆண்ட காலத்திலே தன் மானத்தை ஓம்பினர் என்பதும், மானத்தையும் உரிமையையும் பெரிதெனக் கொண்ட தமிழரிடை, ஜாதிப் பித்தம், வைதீக வெறி, அடக்கியாளும் ஆணவம், சுரண்டிப் பிழைக்கும் சூது ஆகியவைகள் கிடையாது என்பதும், களத்திலே பெரும் போரிடும் வீரர்கள் கபடரின் பொறியிலே வீழ்ந்தனர் என்பதும், மீண்டும் தம்மை உணரும் தன்மை பெற்று விட்டால், தமிழினம் தாசரானதற்குரிய காரணத்தைக் கண்டறிந்து விட்டால் அவர்கள் "கொலை வாளினை எடடா, மிகு கொடியோர் செயல் அறவே" என்று முழக்கமிட்டுக் கிளம்புவர் என்பதும், தமிழரின் இன்றைய நிலை தாழ்வுடையது இழிவுடையது இடர் மிகுந்தது என்ற போதிலும், தங்கள் இனத்தைக் கெடுக்கும் கொள்கைகளை அவர்கள் நீக்கிவிட்டால், களை எடுத்த வயலாவர், விழித்தெழுந்த வேங்கையாவர், என்பதும் பெரியார் அறிவார், தமிழர், அவர்களுக்குள் தகாதாரின் கூட்டுறவு.

மாசு துடைத்திடுக, பாசி போக்கிடுக! களை நீக்குக, கபடரின் பிடியைப் போக்குக, என்று கனிவுடன் கூறுகிறார் கடமை வழி நிற்கும் கிழவனார்......தமிழரின் அந்நாள் நிலையும் இந்நாள் நிலையையும் தெரிந்ததோடு மட்டுமின்றி, கால வேகம், கருத்து வேகம் பொதுவாக மக்களிடை உள்ள விழிப்பு ஆகியவற்றையும் அறிந்திருக்கும், ரசனைக்காகவோ, சொற்பெருக்காற்றவோ மட்டும் பயன்படும் அறிவாக அதனைக் கொள்ளாமல், மக்கள் விடுதலைக்கு, மறுமலர்ச்சிக்கு, இன எழுச்சிக்கு அந்த அறிவைத் துணை கொள்ளும் திறனும் அவரிடம் இருப்பதால், அந்தத் திறமை கஷ்ட நஷ்டமெனும் சாணையிலே தீட்டப்பட்டுக் கூராக்கப் பட்டிருப்பதால், அந்த ராமசாமியால் தமிழர் மட்டுமே ஒரு தேசத்தை ஆளமுடியுமென்று தைரியமாகக் கூறப்படுகிறது. அவருக்கு நிச்சயமாகத் தைரியம் இருக்கிறது. வீறு கொண்ட தமிழன் வைதீகத்தைக் கூறு கூருக்குவான் என்று! அவர், ஒரு கற்பனையுலகைக் காட்டத் தேவையுமில்லை, தமிழர் ஆள ஒரு வெளி நாட்டைப் பிடிக்கத் தேவையில்லை. தமிழன் ஒரு நாட்டுச் சொந்தக்காரன். இன்று அந்த இடம் சந்தையாகி விட்டது. தமிழன் ஆண்டு பழக்கப்பட்டவன், இன்று ஆண்டவனுக்கு அன்பு செலுத்துவதாகக் கருதிக் கொண்டு, ஆரியர் அடிமையாக உழல்கிறான். ஆட்சிக்கேற்ற அருங்குணமும், நாட்டைப் பாதுகாக்கும் நல் வீரமும் தமிழனுக்கு உண்டு. எனவே பெரியார் "தமிழா நீ தனி இனம்! தமிழா! நீ தரணி ஆண்டவன்! தமிழா! உன்னை நீ உணராமல் உலுத்தருக்கு அடிமையானாய்! பகுத்தறிவுப் படை தொடு! விடுபடு!" என்று கூறினால் தமிழரின் உள்ளத்திலே அந்த உணர்ச்சி வேகம் பாய்ந்தால், "கிளம்பிற்று காண் தமிழர் சிங்கக் கூட்டம்" என்று கவிபாடும் காட்சியாகும் அது. அந்தத் தைரியம், பெரியாருக்கு இருக்கிறது. அதை ஆச்சாரியார் உணர்கிறார். உணர்வதுடன், நமது மாகாணத்தை விடமிகச் சிறிய அயர்லாந்து தன்னாட்சியுடன் இருக்கிறதே, தமிழர் ஒரு நாட்டை ஆள முடியாதா? என்று மேற்கோளுடன் கூடிய உற்சாக மூட்டுகிறார். **ஆனால், உலகம் சுற்றியவர்கள் பட்டதாரிகள், பாராளும் மன்றங்களைக் கண்டவர்கள், என் நாடு, என் இனம், என்று கூறிக் கொள்ளக் கூசுகின்றனர். நம் நாட்டு ஆட்சி, நமது உரிமை என்று பேச நடுங்குகின்றனர். எனது இன விடுதலையே என் வாழ்க்கையின் இலட்சியம் என்று பேசப்பயப்படுகின்றனர். தமிழர் மட்டுமே ஒரு தேசத்தை ஆள முடியும் என்று தைரியங் கூறத் தயங்குகின்றனர். ஒரு பெரியாருக்கு இந்தத் தைரியம் இருக்கிறதே நமக்கு ஏற்படவில்லையே என்று வெட்கம் அடையாமல் இருபது வருஷம், கூட்டு மந்திரி சபை வேண்டும், என்று கூசாது நீட்டுகின்றனர். திரு இடமே! இந்தத் தீராமிலாதார் திருந்தும் இடம் ஏதேனும் உண்டா? ஏன், ஆச்சாரியார் பெரியாருக்கு இருப்பதாகக் குறிப்பிடும் அந்தத் தைரியம் இவர்களுக்கு இல்லை.**

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 88510.